මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
මැතිවරණ මහලේකම් කාර්යාලය, නො.02 සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව
தேர்தல்கள் செயலகம், இல 02 சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

**ஊடக அறிவித்தல் இல : LAE/2024/EPS/24** **2024.10.21**

# உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் - 2024.10.26

## எல்பிட்டிய பிரதேச சபை

## தேர்தல் பிரச்சார நடவடிக்கைகள் தடைசெய்யப்பட்டுள்ள காலப்பகுதி

எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தல், 2024.10.26 ஆம் திகதி நடைபெறும். அதற்கான பிரச்சார நடவடிக்கைகளை மட்டுப்படுத்துவதற்கான காலப்பகுதி, 2024.10.23 ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணியுடன் ஆரம்பித்து 2024.10.26 ஆம் திகதி தேர்தலை நடாத்தி முடிவுகள் வெளியிடப்பட்டதன் பின்னர் முடிவடையவுள்ளது.

அதன்படி, 2024.10.23 ஆம் திகதி எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தல் தொடர்பில் நடாத்தப்பட்ட இறுதி அரசியல் பிரச்சாரக் கூட்டங்களின் வீடியோ காட்சிகளையும் விபரங்களையும் 2024.10.24 ஆம் திகதியன்று ஒவ்வோர் தொலைக்காட்சி/ வானொலி அலைவரிசையின் ஒரு பிரதான செய்தியறிக்கையில் மாத்திரம் பிரச்சாரம் செய்வதற்கும், 2024.09.25 ஆம் திகதி வெளியாகும் செய்தித்தாள்களில் புகைப்படங்களையும் கூட்டங்கள் பற்றிய குறிப்புகளையும் வெளியிடுவதற்கும் செயலாற்றுமாறு அறிவிக்கின்றேன். ஒவ்வோர் அலைவரிசையோடும் செய்தித்தாளோடும் இணைந்த சமூக ஊடகங்கள் மற்றும் ஏனைய அனைத்து சமூக ஊடக தளங்களின் நிருவாகிகளுக்கும் இந்த நிபந்தனைகள் ஏற்புடைத்தாகும். அதேபோல், இந்த இறுதிப் பிரச்சாரக் கூட்டங்கள் பற்றிய விபரங்களை பிரசித்தப்படுத்தும்போது வேட்பாளர்கள் அனைவருக்கும் ஒத்த சந்தர்ப்பம் கிடைக்கின்ற விதத்தில் செய்தித்தாள்களில் இடமொதுக்கிக்கொடுப்பதுடன், அலைவரிகளிலும் ஒலிபரப்பு காலங்களை ஒதுக்கிக் கொடுக்க வேண்டுமென்பதையும் அறிவிக்கின்றேன்.

மேலும், 2024.10.24, 25, 26 ஆம் திகதிகளில் அனைத்து தொலைக்காட்சி அலைவரிசைகளிலும் அந்நாளுக்குரிய செய்தித்தாள் தலைப்புகளை முன்வைக்கும்போது நாழிதழ்களின் செய்தித் தலைப்பை மாத்திரம் சமர்ப்பிக்க வேண்டுமென்பதுடன், செய்திகள் சார்ந்த வேறெந்தக் கருத்து/ யோசனை அல்லது செய்திக்கு மாற்றமான கருத்து வெளிப்பாடொன்றை அதனை சமர்ப்பிக்கும் ஊடகவியலாளர்கள் முன்வைக்கக் கூடாது. அத்துடன், எந்தவோர் அரசியல் பிரச்சார செய்தியொன்றின்மூலம் கட்சியை/வேட்பாளரை ஊக்குவிக்கும் அல்லது பாதிப்புக்கு உள்ளாக்கும் விதத்திலான சமர்ப்பிப்புகளை முன்வைக்காமல் இருக்குமாறு அனைத்து அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடக அலைவரிசைகளின் தலைவர்களுக்கும், செய்திப் பிரிவுத் தலைவர்களுக்கும், செய்தி ஆசிரியர்களுக்கும், ஆசிரியர் பீட பணிப்பாளர்களுக்கும், தலைமை பதிப்பாசிரியர்களுக்கும், அனைத்து சமூக ஊடக உரிமையாளர்களுக்கும் மேலும் அறிவித்தல் கொடுக்கின்றேன்.

அதேபோல், இந்த பிரச்சார நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்படும் காலப்பகுதியினுள் எல்பிட்டிய உள்ளூர் அதிகார சபை அதிகார இடப்பரப்பினுள் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் கட்சிகள்/ வேட்பாளர்கள்/ குழுக்கள் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்வதைத் தவிர்க்குமாறும், தேர்தல் சட்டங்களை வலுவாக்கம்செய்வதற்கு உதவுமாறும் சம்பந்தப்பட்ட அனைத்து திறத்தவர்களிடமும் தேர்தல் ஆணைக்குழு வேண்டுகோள் விடுக்கிறது.

**சமன் ஸ்ரீ ரத்நாயக்க**
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்